# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 23 புதன்கிழமை 05.06.2024 கதிர் 222











# தியாகி பொன் சிவகுமாரனது 50 ஆவது நினைவேந்தல் உரும்பிராயில் உள்ள நினைவிடத்தில் நடைபெற்றது

## தமிழ் அரசியல்வாதிகள் பலரும் பங்கேற்பு

தியாகி பொன் சிவகுமாரனது 50 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

உரும்பிராயில் உள்ள பொன் சிவகுமாரனின் நினைவிடத்தில் இன்று புதன்கிழமை காலை இடம்பெற்ற நினைவேந்தலில் ஈகைச்சுடரினை பொன் சிவகுமாரனின் சகோதரி ஏற்றிவைத்ததுடன் அகவணக்கமும் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் அரசியல் கட்சி பேதமற்று பலரும் கலந்து கொண்டனர்.

கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், ரெலோவின் சார்பில் விந்தன் கனகரட்ணம், வடமாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் க.சர்வேஸ்வரன், ஈழ சிவ சேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து தியாகி பொன் சிவகுமாரனது சமாதி அமைந்துள்ள வேம்பிராய் மயானத்திலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அஞ்சலி செலுத்தியிருந்தார். (01)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1750 சம்பளம் வழங்குவது சாத்தியமற்றதாகும்!

## தனியார் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு




"இன்றைய நிலவரத்தின்படி தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1750 சம்பளம் வழங்குவது கடினமானது. அது எந்த வகையிலும் சாத்தியப்படாது!" என தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லயனல் ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்கள் கடமைக்கு வருகை தருவதற்கேற்ப கொடுப்பனவொன்றை வழங்குவது குறித்து சிந்திக்க முடியும் எனத் தெரிவித்துள்ள அவர், "அரசாங்கம் தெரிவிக்கும்

2▶

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குறித்து முடிவெடுக்கும் உரிமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குக் கிடையாது!

## மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுர தேவப்பிரிய



"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் நெருக்கடியை ஏற்படுத்தியவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஆவார், அவர் செய்த மாபெரும் துரோகத்தால் இன்று கட்சி சிதைந்து கிடக்கிறது. இதற்கு அவர்தான் முழுப்பொறுப் பேற்க வேண்டும்'என மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுர தேவப்பிரிய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக கட்சி ஆதரவாளர்கள் கூட நட்டாற்றில் விடப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில், "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவிதியை எண்ணி ஆதரவாளர்கள்

2▶

# இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் அமைச்சர்களும் இன்று இராஜினாமா!

## 3ஆவது தடவை ஆட்சியமைக்க முனைப்பு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அவருடன் அமைச்சர்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்து கடிதங்களில்

2▶

# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் நாட்டுக்கு வந்ததும் ஊழியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## கல்வி இராஜாங்க அமைச்சரின் உரையால் ஊழியர்கள் விசனம்!

(கொழும்பு)

நாடெங்கிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் போதனை சாரா ஊழியர்களின் போராட்டம் குறித்து கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் இராகவன் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து பல்கலைக்கழக ஊழியர்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

2016 ஆம் ஆண்டிலிருந்து தமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய இடர்காலக் கொடுப்பனவு மற்றும் சம்பள ஏற்றங்களை உறுதிப்படுத்தக்கோரி, நாட்டிலுள்ள 17 பல் கலைக்கழகங்களிலும் பணியாற்றும் போதனை சாரா ஊழியர்கள் கடந்த மே மாதம் 2 ஆம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் முடங்கிப் போயிருக்கின்றன.

இந்தப் போராட்டம் குறித்தும், இதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் நேற்று 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சமயத்தில், கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் இராகவன் குறுக்கிட்டு, "கல்வி சாரா ஊழியர்களின்

2▶


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் விழிப்புணர்வு நிகழ்வுகள்



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றன.

வடமாகாண மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கை நிதியமும் இணைந்து வீதியால் செல்லும் வாகனங்களின் புகைகளின் தரங்களைப் பரிசோதித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் சுற்றுச்சூழலை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு நாடகமும் நடாத்தப்பட்டது. (02)

## யாழ் - அக்கரைப்பற்று பேருந்தின் மீது கல் வீச்சு




நேற்று (04) மாலை 5.25 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சேவை பேருந்து ஒன்று வெலிகந்த பிரதேசத்தில் பயணித்துக்கொண்டிருந்த போது, அப்பகுதிக்கு காரொன்றில் வந்த இருவர் எதிர்பாராத விதமாக குறித்த பேருந்தின் மீது கற்களை எறிந்துள்ளனர். இதன்போது பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி உடைந்து, சாரதியின் நெற்றியில் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து, காயங்களுக்கு உள்ளாகிய பேருந்தின் சாரதி உடனடியாக வெலிகந்தை அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவரது நெற்றியில் 12 தையல்கள் போடப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை அரசாங்க வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சாரதி தனது நெற்றியில் ஏற்பட்ட காயத்தையும் பொருட்படுத்தாமல், பேருந்தில் பயணம் செய்த பயணிகளுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வகையில் பேருந்தைப் பாதுகாப்பாக ஓர் இடத்தில் நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ரென-13)

## யாழ். பல்கலைக்கழக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினை குறித்து நான் தொடர்ச்சியாக அந்த நிருபர்களுடன் பேசி வருகிறேன். போராட்டக்காரர்களுக்குத் தீர்வைக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வெளிநாட்டில் நிற்கிறார். அவர் வந்ததும் தீர்வு தரப்படும்" என்று தெரிவித்திருந்தார்.

அவரது கருத்து விடயப் பொருத்தப்பாடு இல்லாத ஒன்று என்றும், நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் போராட்டத்துக்கும், பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தர் வெளிநாடு சென்றதற்கும் என்ன சம்பந்தம் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள யாழ். பல்கலைக்கழகத் தொழிற் சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, போராட்டம் பற்றியோ அதன் தார்ப்பரியங்கள் பற்றியோ அடிப்படை விடயத்தைக் கூடத் தெரியாதவர் போல நடந்து கொள்ளும் கல்வி இராஜாங்க அமைச்சரிடமுருந்து நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை தமக்குத் துளி கூட இல்லை!, என்று கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஊழியரொருவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியப் பிரதமர் நரேந்திர ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையொப்பமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய தேர்தல் முடிவுகளின் பின்னரான புதிய அரசில், மோடியின் பதவியேற்பு எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் அவர் தனது தற்போதைய பிரதமர் பதவிக்கான இராஜினாமாக் கடிதத்தை இந்திய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவிடம் கையளித்துள்ளார்.

மோடியின் இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக் கொண்டுள்ள இந்தியக் குடியரசுத் தலைவர், அடுத்த அரசு அமையும்வரை அவரை காபந்து பிரதமராக தொடரும்படி கேட்டுக்கொண்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய மக்களவைத் தேர்தலின் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில், நரேந்திர மோடியின் தலைமையிலான கூட்டணி மூன்றாவது முறையாகவும் ஆட்சியமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்தத் தேர்தலில் பா.ஜ.க விற்கு தனிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், பா.ஜ.க ஆட்சியமைப்பதில் கூட்டணிகளின் ஆதரவிலேயே தங்கியிருக்கிறது. இந்நிலையில், பா.ஜ.க விற்கு கூட்டணிக் கட்சிகள் சில நிபந்தனைகளை விதித்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

3 ஆவது முறையாக ஆட்சி அமைக்க பா.ஜ.க. பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில், ஆந்திர மாநிலத்தின் சந்திரபாபு நாயுடுவின் சரத்பவார் தெலுங்குதேசம் மற்றும் பீகார் மாநிலத்தின் நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளம் ஆகிய கூட்டணிக் கட்சிகள் நிபந்தனைகள் விதிப்பதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக இந்த இரு மாநிலங்களும் சிறப்பு அந்தஸ்துக்கான கோரிக்கையை பல ஆண்டுகளாக வலியுறுத்தி வரும் நிலையில், இந்தக் கோரிக்கையை, தற்போது ஆட்சிக்கு ஆதரவு தெரிவிக்க நிபந்தனைகளாக விதித்து வருவதாக கூறப்படுகிறது.

தனிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், தனது தேசிய ஜனநாயக கூட்டணி (என்டிஏ) கட்சிகளுடன் கைகோர்த்து, மத்தியில் கூட்டணி ஆட்சி அமைக்கும் நிலையே பா.ஜ.க.வுக்கு உருவாகியுள்ளது.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் மோடி கட்சி ஆதரவாளர்களைச் சந்தித்து, தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் ஆட்சியமைக்கும் நம்பிக்கையுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணியின் மூன்றாவது ஆட்சியில் மிகப்பெரிய முடிவுகள் எடுக்கப்படும் என உத்தரவாதம் அளித்துள்ள அவர், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியாவை மாற்ற அதிதீவிர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (04)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏமாற்றமடைந்துள்ளனர். இன்று கட்சியை குறித்து முடிவெடுக்கும் உரிமை மைத்திரிபால சிறிசேனவுக்கு இல்லை. இந்த மாபெரும் காட்டிக் கொடுப்பை செய்தவர் அவர் தான்" என்றார். (ரென-12)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவிற்கு சம்பளம் வழங்குவது எமக்கு கடினமாகும். நாங்களும் இந்த தொழிலை மிகவும் கஷ்டத்தின் மத்தியிலேயே நடத்தி வருகின்றோம்" என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், எமக்கு தேயிலை உற்பத்தியாளர்களிடமிருந்து தேயிலை கிடைத்ததும் அவற்றை முழுமையான உற்பத்தியாக அமைக்கின்றோம், நம் மத்தியில் 100க்கும் மேற்பட்ட தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் உள்ளனர். இந்தச் சம்பளத்தை வழங்குவது குறித்து தற்போது நம்மிடையே பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். எதிர்காலத்தில் இதுக்குறித்து ஜனாதிபதியைச் சந்தித்தும் பேசவுள்ளோம். எவ்வாறாயினும், தொழிலாளி ஒருவருக்கு நாளொன்றிற்கு 1750 ரூபாய் வழங்குவது எமக்குக் கடினமானதாகும்" என்றார். (ரென-11)








உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சிவசிதம்பரத்தின் 22 வது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் இன்று



மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சிவசிதம்பரத்தின் 22 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் இன்று காலை முன்னெடுக்கப்பட்டன.

நெல்லியடியில் அமைந்துள்ள சிவசிதம்பரததின் சிலையடியில் நடைபெற்ற நினைவுதின நிகழ்வுகளின்போது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டதுடன் இந்தியாவில் சிகிச்சைக்கு பின்னர் நாடு திரும்பிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்துகொண்டார்.

முருகேசு சிவசிதம்பரம் (ஜூலை 20, 1923 - ஜூன் 5, 2002) இலங்கைத் தமிழ் அரசியலில் நீண்டகாலம் செயற்பட்டதுடன் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒரு வழக்கறிஞராவார். நாடாளுமன்றத்தின் துணைச் சபாநாயகராகவும் 1968 முதல் 1970 வரை செயற்பட்டிருந்தார். (01)

# காரைதீவில் சிரமதானம் சுற்றுச்சூழல் வார நிகழ்வு





(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய சுற்றுச்சூழல் வாரத்தினை முன்னிட்டு காரைதீவில் சிரமதான நடவடிக்கை பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது.

ஜூன் 3 சுற்றாடல் தூய்மைப்படுத்தல் தினம் என்பதற்கமைய காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை, காரைதீவு சுகாதார வைத்திய அலுவலகத்தினர், காரைதீவு பொலீஸ் நிலையத்தினர் மற்றும் பொதுமக்களது ஒத்துழைப்போடு இச்சிரமதானம் மேற்கொள்ளப் பட்டது.

காரைதீவு-02, 03, 05 ஆம் பிரிவுகளின் தோணாவின் சூழலினை தூய்மையாக்கல் மற்றும் காரைதீவு-09 வெட்டு வாய்க்கால் முகத்துவாரப்பகுதியில் முறைகேடாக குப்பைகூழங்கள் கொட்டப்பட்டு மிகவும் மோசமான முறையில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு காணப்படும் இடத்தினை தூய்மையாக்கல் ஆகிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது பிரதேசசபையும் தனது ஆளணியினரையும் வாகன வசதிகளையும் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.






# மிதி வெடி

நேற்றுப் பின்னேரம் நல்லூரடியில ஒரே பரபரப்பு...

மாசக்கணக்காப் பூட்டிக் கிடக்கிற பெரிய பள்ளிக்கூடம் இண்டைக்குத் திறபடப் போகுதாம் எண்டது தான் அந்தப் பரபரப்புக்கு காரணம்...

அந்தப் பெரிய பள்ளிக்கூடத்தில தலைமை ஆசிரியரா இருந்தவர் ஒருத்தர் பின்னேரத்தில அதில வந்திருந்து தன்னை விட்டால் ஆளில்லை எண்டு வெட்டி விழுத்துறது தான் வேலை... வேற ஒருத்தரையும் ஒரு சொல்லுக் கதைக்க விடாது மனுசன்.. தன்ர புழுகு மூட்டைய அவிட்டுக் கொட்டுறது தான் அவருக்கு வேலை...

அவர் சொல்லச் சொல்ல "ஆமா.." போடுறதுக்கெண்டு ஒரு கூட்டம் எப்பவும் கூடவே இருக்கும். அவர் என்னத்தப் புழுகினாலும் நாலு விசியத்தைப் பொறுக்கலாம் எண்டுட்டு நானும் போய் இருக்கிறனான் தான் பாருங்கோ... அந்த நேரமாப் பாத்துத் தான் அந்தக் கூட்டத்தில இருந்த ஒருத்தர் கேட்டார்... " என்ன வீசி, நாளைக்குச் சரிவரும் போல கிடக்கு? இராஜாங்க அமைச்சர் தலையிட்டுத் தீர்க்கப் போறார் போல கிடக்கு..? எண்டார்...

பாவம், விசியம் தெரியாத அப்பாவி மனுசன் கேட்ட கேள்விக்கு இந்த "மேதாவி" சொன்ன கதையளைக் கேட்டால்... காறித் தான் துப்புவியள்...

கிட்டத்தட்ட ஒரு மாசத்துக்கு மேல தங்கட சம்பளப் பிரச்சினையை முன்வைச்சு நாடு முழுவதும் பிரச்சினை ஓடுது, இந்த மனுசன் என்னண்டா... அந்தக் காலத்தில ஆரை வைச்சு ஆப்புச் செருகின்னான், அவன் அப்பிடி - இவன் இப்பிடி எண்டு புராணப்படிப்பு தொடங்கீற்றுது... கடைசி வரையும் கம்பஸ் இயங்குமா, இல்லையா? எண்டதுக்குப் பதிலே சொல்லேல்ல!

உந்தாளையும், அந்த இராஜாங்க அமைச்சரையும் நினைக்க எனக்குச் சிரிப்புத் தான் வந்தது. அதில இருந்தவையிட்டப் போய் அங்க ஒண்டுமே நடக்காது பாருங்கோ... அமைச்சராலேயே தீர்க்க முடியேல்ல... இராஜாங்க அமைச்சர் என்ன புடுங்கப்போறாரோ...? எண்டு நாலு கேள்வி கேக்க வேணும் போல இருந்தது...

ஆனால், அந்த "முன்னாள்"க்கு முன்னால போய் நிண்டு நான் சொல்ல வெளிக்கிட்டால், அந்த மனுசன் அறுக்கிற அறுவையத் தாங்கேலாது பாருங்கோ... எனக்கும் வாய் சும்மா கிடவாது... பிறகு அண்டைக்கொரு நாள் சரஸ்வதி மண்டபத்தில நடந்தது போல "வாழ்நாள்" என்னட்ட வாங்கிக் கட்டிக்கொண்டு தான் போயிருப்பார்...

அதைவிடுங்கோ... "எங்கட பிள்ளையள் எவ்வளவு காலம் தான் படிப்பில்லாமல் வீடுகளில நிக்கிறது? உதுக்கொரு முடிவே இல்லையா?" எண்டு நீங்கள் கேக்கிறது தெரியுது... அதுக்கு நான் என்னப்பா செய்யுறது?

நியாயமான போராட்டத்துக்கு நீதி கிடைக்க வேணும் எண்டால் போராடுறவை சரியான ஆக்களை எல்லோ பிடிக்க வேணும்... ?

உங்களுக்கு ஒண்டு தெரியுமே? தலைநகரம் படத்தில "நானும் ரவுடி தான்... நானும் ரவுடி தான்" எண்டு தன் தாய் மீது சத்தியம் செய்த நடிகர் வடிவேலு கடைசியா "இந்தா பாருய்யா நானும் சரிக்குச் சரி கதைச்சுட்டன்... ரவுடி எண்டு ஒரு பில்டப்பு குடுத்துட்டன்யா..." எண்டு நாண்டு கொண்டு "பொலீஸ் ஜீப்"ல ஏறிப்போறது மாதிரித் தான் இந்த இராஜாங்க அமைச்சரும்...

ஏதோ கட்சிப் பங்கீட்டால பாவம் பழைய விதானையார் சொன்னதுக்காக ஒரு செல்லாக்காசு பதவி குடுக்கப்பட்டது ஊருக்கே தெரியும். அவரை அங்க ஒரு சதத்துக்கும் மதிக்கிறேல்லயாம்.

இந்த வருசத் தொடக்கத்தில யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி வந்த நேரத்தில "கம்பஸ்" புள்ளையளோட கதைக்க வேணும் ஒழுங்குபடுத்துங்கோ" எண்டு ஆணைக்குழுத் தலைவருக்குள்ளால சொல்லுவிச்சவராம் ஜனாதிபதி... அந்த நேரம் இந்த இராஜாங்கம் எப்பிடியாவது ஜனாதிபதியோட தானும் கூடி வந்து நிண்டு, யாழ்ப்பாணத்தாருக்குப் படம் காட்ட வேணும் எண்டு ஓடாத ஓட்டம் இல்லையாம் ... ஆனா அவரென்ன, இவரென்ன எவரையும் விடக் கூடாது எண்டு ஜனாதிபதியார் கடுமையான உத்தரவாம்!

இவ்வளவும் ஏன், போன மாசம் "ரவுணு"க்குள்ள திறந்த எட்டு மாடிக் கட்டடத்தின்ர திறப்பு விழாவுக்குத் தன்னையும் சிறப்பு விருந்தினராப் போட வேணும் எண்டு அமைச்சு அதிகாரிகளுக்குக் குடைச்சலாம்... அதிலையும் ஜனாதிபதி செயலகம் இவரை வெட்டுறதில குறியா இருந்ததாம்.

இப்பிடித்தான், 2021ல உவர் "எம். பி" யா இருக்கேக்க கிளிநொச்சியில ஜப்பான்காரரின்ர கட்டிடம் ஒண்டைத் திறக்க வெளிக்கிட, அந்தத் திறப்பு விழா அழைப்பிதழில தன்ர பேரைப் போடேல்ல எண்டு "கோத்தா"க்குள்ளல திறப்பு விழாவை நிப்பாட்டி, புதுசா அழைப்பிதழ் அச்சடிக்கப் பண்ணினவராம். அதே மாதிரி இந்த முறையும் செய்யப் பாத்தவராம்... இராஜாங்கமா இருந்தாலும் தான் எடுக்கிறது தான் முடிவெண்டு ஜனாதிபதியார் வெட்டிப் போட்டாராம்...

என்னதான் அடி விழுந்தாலும் அந்த மனுசன் பண்ணுற அலப்பறை பெரும் அலப்பறையப்பா..!

மாகாணத்தில ஆளும் அதிகாரம் கையில இருக்கேக்க ஒண்டும் வெட்டிக் கிழிக்காமல் விட்டுட்டுப் போனவர் இப்ப வெட்டி வீறாப்புப் பறையிறதில கெட்டிக்காறனா இருக்கிறார்.


தன்ர பதவிக்கு தனக்கெண்டு ஒரு அதிகாரமுமில்லை எண்டு ஆளுக்கு நல்லாத் தெரியும். ஆனா... "தானும் ஒரு ஆளாம்... தவிடும் ஒரு கொழுக்கட்டையாம்..." எண்டு தனக்குச் சம்மந்தமே இல்லாத விசியங்களுக்குள்ள வாயைக் குடுத்து வாங்கிக் கட்டுறது இந்தாளுக்கு வழக்கமாப் போச்சுது பாருங்கோ...

இதுக்குள்ள நேற்று "பார்ளிமென்ற்"ல நடந்த சம்பவத்தை கேட்டியள் எண்டால், விழுந்து விழுந்து சிரிக்கிறத விட வேற வழியில்லை.

கஜேந்திரன் "எம்.பி"க்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில பல்கலைக்கழக ஊழியர்கள் நாடு முழுவதும் போராடுகினம். அதை தீர்க்கிறதுக்கு கல்வி அமைச்சும், அரசாங்கமும் விரைவா நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு விலாவாரியா சொல்லி முடிக்க, இடைக்குள்ள புகுந்த இந்த இராஜாங்க அமைச்சர், "போராடுகிறவர்களுக்கு தீர்வு குடுக்கிறதுக்கான சகல ஏற்பாடுகளும் சரி! யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் வெளிநாட்டில நிக்கிறார். அவர் திரும்பி வந்ததும் உடனடியாக முடிக்கப்படும்" எண்டு ஒரு போடொண்டு போட்டாரே... அதில விளங்கியிருக்கும் ஒரு பொறுப்புள்ள அமைச்சர் பிரச்சினய விளங்கி வைச்சிருக்கிற விதம்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# நினைவலைகளில் தியாகி பொன் சிவகுமாரன்



சி. தவராசா
முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்,
வடக்கு மாகாண சபை

ஜூன் 5ஆம் திகதி, சயனைட் கலாசாரத்தை தமிழ்ப் போராளிகள் மத்தியில் விதைத்த தியாகி பொன் சிவகுமாரன் இறந்து 50 ஆண்டுகளாகின்றன. ஏற்கனவே கைது செய்யப்பட்டு பொலிஸாரின் சித்திரவதைகளுக்கு ஆளான அனுபவத்தைக் கொண்ட சிவகுமாரன், இன்னொரு சந்தர்ப்பத்தில் பொலிஸாரினால் தான் கைது செய்யப்படுவேனாகின் சயனைட் அருந்தி தன்னுயிரை மாய்த்துக் கொள்வேன், என பலதடவைகள் கூறியது இன்றும் என் நினைவலைகளிலிருந்து நீங்க மறுக்கிறது.

தனது கூற்றினை அவர் செயல்வடிவத்திலும் நிரூபித்துக்காட்டியவர். அவருடன் கூடிப்பழகியவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் மட்டுமே இன்று அவரை நினைவுகூரக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.


அவரின் ஆரம்பகால செயற்பாடுகளிலிருந்து அவருடன் நெருங்கிப் பழகியவன் என்ற வகையில் அவர் தொடர்பான எனது அனுபவங்களை இக்கட்டுரை மூலம் பகிர்ந்துகொள்கின்றேன்.

தமிழர்களின் போராட்ட வரலாற்றில் சிவகுமாரனைப்போல பல போராளிகளின் உயிர்த்தியாகங்கள், அர்ப்பணிப்புகளின் விளைவாக ஏற்படுத்தப்பட்டதே இலங்கை - இந்திய ஒப்பந்தமும். அதனடிப்படையில் உருவான 13ஆவது அரசியலமைப்பு திருத்தமும், மாகாண சபை முறைமையுமாகும்.

இப்போராட்ட வரலாற்றுடன் எவ்வித தொடர்புகளும் அற்றவர்களும் இவ் வரலாற்றுப் பின்னணி தெரியாதவர்களுமே இன்று மாகாண சபைகளின், குறிப்பாக வடக்கு மாகாண சபையின், நிறைவேற்று செயற்பாடுகளுக்கு பொறுப்பானவர்களாக இருந்துவருவதுடன், தமது சொந்த நலன்களை முன்னிறுத்தி அவர்கள் செயற்பட்டு வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

சிவகுமாரன் உரும்பிராயினைச் சேர்ந்த பொன்னத்துரை அன்னலட்சுமி தம்பதியினருக்கு நான்காவது புதல்வனாக 26.08.1950ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதில் அவரை "திரவியம்" என செல்லமாக அழைத்தனர். யாழ். இந்துக் கல்லூரியில் தனது படிப்பை முடித்துக்கொண்ட அவர், கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். தொழிநுட்பக் கல்லூரியில் கல்விகற்ற 1970 ஆரம்ப காலப்பகுதியில்தான் அவருடனான நட்பு எனக்கு ஏற்பட்டது.

தொழிநுட்பக் கல்லூரியில் படித்துக் கொண்டே கொக்குவில் கிழக்கில் முத்துக்குமாரசாமி என்பவரிடம் ஆங்கிலம் கற்பதற்காக வந்தபோதே அவருடன் நெருக்கமான நட்பு ஆரம்பமானது.



எமது உரிமைகளை ஜனநாயக வழிகளில் வென்றெடுக்க முடியாது என்பதனை அவர் அடிக்கடி சொல்வதுண்டு. ஆயுதப் போராட்டத்தினூடாகவே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று கூறுவதுடன் நின்றுவிடாமல் ரின்பால் தகரப்பேணியில் வெடிகுண்டு எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பாகவும் எமக்கு எடுத்துரைப்பார். இவையெல்லாம் எமக்கு அந்நேரத்தில் புதுமையான மற்றும் ஆச்சரியமான விடயங்களாகவே இருந்தன.

அத்துடன் நின்றுவிடாமல் உரும்பிராயில் உள்ள தனது வீட்டிற்கு எம்மை அழைத்துச் சென்று ரின்பால் தகரப்பேணியில் வெடிகுண்டு தயாரிக்கும் முறையை செயல்வடிவிலும் காட்டினார்.

தகரப்பேணியில் வெடிகுண்டு தயாரிப்பது, அதற்கு தேவையான கந்தகம், பொட்டாசியம் போன்ற மூலப் பொருட்களையும் சிவகுமாரன் எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பது தொடர்பாக நான் அறிந்தவற்றினையும் பதிவிட விரும்புகின்றேன்.

சிவகுமாரனுடன் குட்டிமணியின் அண்ணனின் மகன் ஒருவரும் கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரியில் படித்துள்ளார். இருவருக்கும்இடையில்இருந்த ஒருமித்த சிந்தனையின் விளைவாக குட்டிமணியின் அண்ணனின் மகன் வல்வெட்டித்துறையில் குட்டிமணியினால் நடாத்தப்பட்டுவந்த கோழிப்பண்ணைக்கு சிவகுமாரனை அழைத்துச் சென்றுள்ளார்.

அக்காலகட்டத்தில் வல்வெட்டித்துறையில் கடத்தல் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் கடற்படையினருக்குமிடையில் பாரிய முரண்பாடு நிலவிவந்தது. இம்முரண்பாடுகளின் ஒரு வெளிப்பாடே குட்டிமணியினால் நடாத்தப்பட்ட கோழிப் பண்ணை என்ற போர்வையில் சிறிய குண்டுகளைத் தயாரிக்கும் செயற்பாடாகும். சிவகுமாரன் அப்பண்ணையிலேயே குண்டுகளைத் தயாரிக்கும் முறை மையினை கற்றுக்கொண்டதாகவும் அதற்குரிய பொருட்களை பெற்றுக் கொண்டதாகவும் நான் அறிகின்றேன்.

சிவகுமாரன் ஓர் ஆயுதப் போராளி மட்டுமல்ல. தமிழர்கள் மத்தியிலிருந்த சீர்கேடுகளை, குறிப்பாக சாதிக் கொடுமைகளை இள வயதிலிருந்தே எதிர்த்து வந்த ஒருவர். தனது இளம் வயதிலிருந்தே சமபந்தி போஜனத்தை நடாத்தி இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்கியவர். அத்துடன் மரண வீடுகளில் பறை மேளம் அடிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற முயற்சியில் உரும்பிராயிலுள்ள அச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடி பறை மேளங்களை உரும்பிராய் சந்தியில் போட்டு உடைத்து எரித்தார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கூர்மையடைந்திருந்த சாதி வேறுபாடுகளை களைய வேண்டும் என்பதில் ஜனநாயக வழியில் முனைப்பாக செயற்பட்டதுடன், அப்போதைய அரசினால், புத்தூர் போன்ற பிரதேசங்களில் ஏழ்மை நிலையிலிருந்தவர்களை அரசின் அனுசரணையுடன் பௌத்த மதமாற்றம் செய்யப்படுவதனை எதிர்த்து ஜனநாயக வழியிலான போராட்டங்களை முன்னெடுத்ததுடன் எம்மையும் அதில் இணைத்துக்கொண்டார்.

ஆசிரியர் முத்துக்குமாரசாமி ஆங்கிலம் கற்பிப்பது மட்டுமல்லாமல், அரசியல்போராட்ட வரலாறுகளையும்இடையிடையே எடுத்துரைப்பதுண்டு. அவரது வீட்டின் அண்டைய வீட்டில் அவரது தம்பியார் ஆனந்தகுமாரசாமி வசித்து வந்தார். அவர், அப்போதைய அரசியல் சூழ்நிலைகளில் ஆயுதப் போராட்டத்தின் மூலமே தீர்வினை பெறலாம் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர்களது வீட்டிற்கு அண்மையில் ஞானசுந்தரம் என்ற இளைப்பாறிய பொலிஸ்காரர் இருந்தார். அவர், வன்முறைப் பாதை வழியாகத்தான் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்பதில் அதீத நம்பிக்கை கொண்டிருந்தது மட்டுமல்லாமல், இளைஞர்கள் மத்தியில் அது தொடர்பாக தீவிர பிரச்சாரத்திலும் ஈடுபட்டிருந்தார். இந்த மூன்று வீடுகளிலும்தான் சிவகுமாரனுடன் நானும் அந்நேரத்தில் அதிக நேரங்களை செலவிட்டு வந்துள்ளோம்.

சிவகுமாரன் வல்வெட்டித்துறையிலிருந்து கொண்டுவந்த கந்தகம், பொட்டாசியம் போன்ற வெடிமருந்துகளை ஆனந்தகுமாரசாமியின் வீட்டில் பதுக்கி வைத்திருந்தார். இவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகளில் ஒருபகுதியினை பாவித்து குண்டை தயாரித்து அந்நேரம் பிரதியமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறி என்பவர் உரும்பிராயில் உள்ள பாடசாலையொன்றின் நிகழ்விற்கு வந்திருந்தவேளையில் அவரது காரின் சில்லின் பின்பக்கமாக வைத்துள்ளார். நிகழ்வு முடிவடைந்து பிரதியமைச்சரை ஏற்றுவதற்காக கார் புறப்படவிருந்த வேளையில் குண்டு வெடித்தது. இது அவரின் முதற் பரிசோதனை ஆதலினால் காருக்கு சிறிது சேதமேற்பட்டதேயொழிய வேறு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

உரும்பிராயில் தீவிர அரசியல் போக்குள்ளவர் சிவகுமாரன் என்பது ஊரறிந்த விடயம். இதனால் இதனை யார் செய்திருப்பார் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. அதனடிப்படையில் பொலிஸார் சிவகுமாரனைக் கைதுசெய்தனர். சிவகுமாரன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நாமனைவரும் கைது செய்யப்படுவோம் என்பதனை நாம் உணர்ந்துகொண்டோம்.

அடுத்த நாள் இரவு முத்துக்குமாரசாமியின் வீட்டில் இது தொடர்பாக கூடி ஆராய்ந்து கொண்டிருந்த வேளையில் பெருமளவில் பொலிஸார் அவரது வீட்டுக்கு வந்தனர். பொலிஸாரின் வருகையை கண்ட நாமெல்லோரும் அவரின் வீட்டின் பின்பக்கமாக ஓடி தப்பித்துக்கொண்டோம். முத்துக்குமாரசாமி ஆசிரியர் மட்டும் தப்பியோட மறுத்து பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து ஆனந்தகுமாரசாமியை கைது செய்ய பொலிஸார் முனைந்த வேளை அவரும் வீட்டிலிருந்து தப்பிச்சென்றதால், அவரது அண்ணன் முத்துக்குமாரசாமியை கைது செய்தனர்.

சில நாட்களாக தலைமறைவாக இருந்த ஆனந்தகுமாரசாமி சரணடைந்த பின்னரே அவரது அண்ணன் முத்துக்குமாரசாமி விடுவிக்கப்பட்டார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

# சாய்ந்தமருது இளங்கலை பட்டதாரிகளின் உயர்தரப் பாடத் தெரிவுக் கருத்தரங்கு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கல்வி கற்பதற்காக பாடங்களை தெரிவு செய்து மிகவும் இலகுவாக சித்தியடைந்து பல்கலைக்கழகம் நுழைவதற்கான ஆலோசனையும் வழிகாட்டலுக்குமான நிகழ்வொன்று அண்மையில் சாய்ந்தமருது மழ் ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

உயர்தர பாடத் தெரிவு தொடர்பான கருத்தரங்கில் அனுபவம் வாய்ந்த மற்றும் துறை சார்ந்த இளங்கலை பட்டதாரிகள் மற்றும் வளவாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கில் பல்வேறு பாடப்பிரிவுகளின் தேவைகள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இதில் வளவாளர்களாக இலங்கையின் பல பகுதிகளிலும், பல்வேறு பீடங்களிலும் உயர் கல்வியினை தொடரும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# நினைவலைகளில் தியாகி பொன் .......

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவகுமாரனும் ஆனந்தகுமாரசாமியும் அனுராதபுரச் சிறையில் அடைக்கப்பட்டனர். அக்கால சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு பிணை எடுப்பதானால் கொழும்பிலுள்ள மேல் நீதி மன்றத்திற்கே செல்ல வேண்டும். அத்துடன் மேல் நீதி மன்றத்தில் எல்லா சட்டத்தரணிகளும் வாதாட முடியாது. நானும் சிவகுமாரனின் தாயாரும் அமிர்தலிங்கத்திடம் சென்று சிவகுமாரனை பிணையில் எடுப்பதற்கு ஆவண செய்யும்படி வேண்டினோம். எங்கள் கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட அவர், கொழும்பில் வசிக்கும் இராணி சட்டத்தரணி திருச்செல்வம் அவர்களுக்கு ஓர் கடிதத்தினை கொடுத்து அவரைச் சென்று சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார்.

நானும் சிவகுமாரின் தாயாரும் மாளிகைபோல இருந்த கொழும்பிலுள்ள அவரது வீட்டிற்கு சென்றிருந்தோம். அமிர்தலிங்கத்தின் கடிதத்தை படித்துவிட்டு "எங்களைக் கேட்டா குண்டு வச்சீங்க" என்று ஏசினார். ஒருவாறு அவரைச் சமாளித்து சிவகுமாரனுக்காக ஆஜராக வைத்து பிணையில் விடுவிக்க வழிகோரினோம்.

சிவகுமாரன் ஒருநாள் என்னை பல்கலைக்கழகத்தில் தமிழ் மன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு படிப்பை முடித்துக்கொண்டு வந்திருப்பவரும், போராட்டத்தில் தீவிர ஆர்வம் கொண்டவருமான உரும்பிராயைச் சேர்ந்த நண்பர் ஒருவரை சந்திக்க கூட்டிச் சென்றார். அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டவர் சத்தியசீலன் ஆவார்.

அக்காலகட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசினால் பல்கலைகழகத் தரப்படுத்தல் முறை அறிமுகமானது. இனரீதியான தரப்படுத்தல்தான் முதலில் அறிமுகமானது. தரப்படுத்தலிற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென முடிவுசெய்தோம். இது தொடர்பாக ஆர்வமுள்ள பலரை இணைத்து ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினோம்.

மலாயன் கபேக்கு மேலிருந்த மண்டபத்தில் கூட்டம் நடந்தது. சத்தியசீலன், மாவை, லோரன்ஸ், மகா உத்த மன், அரியரட்ணம் (புன்னாலைகட்டுவன்), இலங்கை மன்னன், முத்துகுமாரசுவாமி, சந்திரகுமார் (பிரான்ஸ்), சபாலிங்கம், நடராஜ ஐயர் எனப் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தது நினைவிலிருக்கிறது. மாணவர் பேரவையென செயற்படுவது, தரப்படுத்தலுக்கு எதிராக போராட்டம் செய்வதென முடிவு செய்தோம்.

இம் மாணவர் பேரவை உயர்தர மாணவர்கள் பலரை ஒன்றுதிரட்டி தரப்படுத்தலிற்கு எதிராக மாபெரும் ஊர்வலத்தினை நடாத்தியது. இத் தரப்படுத்தலிற்கெதிரான போராட்டங்களில் சிவகுமாரனின் பங்களிப்பு அளப்பரியது. அதனைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தினை சுமந்து சென்ற அமைப்பாக மாணவர் பேரவை அமைகின்றது. இது பிற்காலத்தில் பல ஆயுதக் குழுக்களின் வளர்ச்சிக்கு வித்திட்ட தாய் அமைப்பாகவும் விளங்குகின்றது.

1976ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சியினை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த அனுசரணையாகச் செயற்பட்ட யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவினைக் கொலை செய்வதற்கு யாழ் வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசலையின் முன்பு எடுத்த முயற்சி துரையப்பா காலதாமதமாக வந்ததால் அவரை உயிர் பிழைக்க வைத்தது. இக் கொலை முயற்சியைத் தொடர்ந்தும் சிவகுமாரன் யாழ் சிறையிலும், அனுராதபுரம் சிறையிலும் ஒன்றரை வருடங்களிற்கு மேலாகக் கைதியாக இருந்தார். 1974ம் ஆண்டு தை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் ஓர் தீவிர தொண்டனாக சிவகுமாரன் கடமையாற்றினார். அம்மகாநாட்டின் இறுதி நாளன்று பொலிசாரினால் நடாத்தப்பட்ட அடாவடித்தனத்தினை நேரில் பார்வையிட்ட சிவகுமாரன் அதற்குப் பொறுப்பானவர்களைப் பழி வாங்கியே தீருவேனென்று அன்றே சபதமெடுத்துக் கொண்டார்.

அவ்வுள்ளக் கொதிப்பின் விளைவே தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு அசம்பாவிதத்திற்குப் பொறுப்பதிகாரியாக இருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசிறி மீது குண்டு வீச்சு நடாத்தி சுட முற்பட்டமைக்குக் காரணமாகும். அம்முயற்சி வெற்றியளிக்காவிட்டாலும் எப்படியோ பழிவாங்கியே தீருவேன் என்ற முனைப்புடன் செயற்பட்டதன் விளைவே சிவகுமாரன் அத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்று ஆறு மாதத்திற்குள்ளேயே தன்னுயிரைப் பலி கொடுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

பொலிஸ் தேடுதல்களிலிருந்து ஒழிந்து வாழ வேண்டிய நிலை மற்றும் தனது தீவிர செயற்பாடுகளுக்கு நிதி ஒரு தடையாக இருந்த சூழலில் பலரிடம் சென்று நிதியுதவி கேட்டும் எல்லோரும் கைவிரித்த நிலையிலேயே கோப்பாய் கிராமிய வங்கியில் பணத்தை கொள்ளையடிக்கும் முடிவிற்கு சிவகுமாரன் வந்தார். அதுவும் அவ் வங்கியில் வேலை செய்த ஊழியர் ஒருவரின் தகவல்களின் அடிப்படையில்தான் பணத்தைக் கொள்ளையிட திட்டமிட்டார். இருந்தும் அச் செயற்பாடு அவருக்கு காலனாக மாறிவிட்டது. அக் கொள்ளைச் சம்பவத்திற்கு முன்பே தன்னிடமிருந்த சயனைட்டினைப் பாணில் நனைத்துக் காகத்திற்குக் கொடுத்து ஒத்திகையையும் சிவகுமாரன் பார்த்திருக்கின்றார்.

தினமும் தவறாது உடற்பயிற்சியில் ஈடுபடும் சிவகுமாரன் ஒருநாள் உடற்பயிற்சி செய்யும் போது கதவின் மேற்புறத்திலிருந்த திறாங்கு அவரின் காலில் குற்றி காயத்தை ஏற்படுத்தியது.

வங்கியில் கொள்ளையிட முற்பட்டபோது உசாரடைந்த ஊழியர்களின் செயற்பாட்டினால் இவர்கள் வங்கியிலிருந்து ஓடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பொலிசாரும் பின் தொடரவே, தோட்டங்களிற்கூடாக ஓடிய சிவகுமாரன் காலில் ஏற்கனவே இருந்த காயத்தில் மரவள்ளிக் கட்டை ஏறியதன் விளைவாகத் தொடர்ந்து ஓட முடியாமல் நின்ற சந்தர்ப்பத்தைப் பாவித்து பொலிசார் அவரை நெருங்கினர்.

சிவகுமாரன் அப் பொலிஸாரின் தன்னியக்கத் துப்பாக்கியைப் பறித்து அவரைச் சுட முயன்றிருக்கிறார். அப்போது அப் பொலிஸ் அதிகாரி தனக்கு மூன்று பெண் பிள்ளைகள் என்றும் அவர்களுடைய தாயாரும் இறந்து விட்டதாகவும் தானும் இறந்தால் அப்பிள்ளைகள் அநாதைகளாகி விடுவார்களென்று கெஞ்சியதன் அடிப்படையில் (சிவகுமாரன் அனுராதபுர சிறையிலிருந்த காலங்களில் சிங்களம் பேசுவதற்கு நன்கு கற்றுக் கொண்டவர்) சிவகுமாரன் அவரைச் சுடாது தன்னிடமிருந்த சயனைட்டை தானே அருந்தித் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

அந்தப் பொலிஸ் அதிகாரி, சிவகுமாரன் வைத்தியசாலையில் இறந்த பின்பு அவரது கைக் கடிகாரம் மற்றும் அவரது காற்சட்டைப் பையிலிருந்த பணம் ஆகியவற்றை சிவகுமாரனின் தாயிடம் கையளித்துவிட்டு, "உங்கள் மகன் ஓர் தெய்வப் பிறவி நினைத்திருந்தால் என்னைச் சுட்டிருக்கலாம்" எனக் கூறி அவரது காலில் வீழ்ந்து வணங்கியுள்ளார்.

தியாகி சிவகுமாரனின் உருவச்சிலை உரும்பிராயில் மூன்று தடவைகள் அமைக்கப்பட்டு இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட நிலையில் வெண்கலத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்காவது சிலையே இன்று உரும்பிராய் சந்தை வளாகத்தில் காணப்படுகின்றது. அவரது உடல் தகனம் செய்யப்பட்ட வேம்படி மயானத்தில் நினைவுத் தூபியும் அமைந்துள்ளது. அவரது ஐம்பதாவது ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று யூன் 5 ஆம் திகதி 2024 இல் உரும்பிராய் சிலை மற்றும் தூபி அமைந்துள்ள இடங்களில் நடைபெற்றுள்ளது.

தமிழர் போராட்ட வளர்ச்சி என்பது ஒரு வகையான அஞ்சலோட்டம். அந்த அஞ்சலோட்டத்தில் ஆயுதப் போராட்டமென்ற அஞ்சலோட்டத்தை ஆரம்பித்து வைத்தது சிவகுமாரனென்றால் அது மிகையாகாது.

தியாகி சிவகுமாரன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்பானென்பது திண்ணம்.



# வெளிநாடுகளில் வசிப்போரை இலக்குவைத்து பெரும் மோசடி யாழில் கைதான நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு!

வெளிநாடுகளில் வசிப்போரை இலக்கு வைத்து பல இலட்ச ரூபாய் மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் கைதான போலி வைத்தியரை விளக்க மறியலில் வைக்குமாறு, யாழ்.நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், தன்னை வைத்தியர் என அறிமுகப்படுத்தி, அதற்கான போலியான ஆவணங்களையும் தயாரித்து, வெளிநாடுகளில் வசிக்கும் நபர்களை இலக்கு வைத்து பல இலட்ச ரூபாய் மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்நிலையில் குறித்த நபர், திங்கட்கிழமை யாழ்.நகர் பகுதியில் அதிசொகுசு காரில் பயணித்துக்கொண்டிருந்த வேளை பொலிஸாரினால் இடைமறிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட வேளை அந்த நபர், 15 பவுண் நகையை அணிந்திருந்ததுடன் 5 இலட்ச ரூபாய் பணத்தினை செலவுக்கு என வைத்திருந்துள்ளார். அத்துடன் 5 அதிநவீன தொலைபேசிகள், பல வங்கி அட்டைகள் என்பவற்றையும் பொலிஸார் அவரிடமிருந்து கைப்பற்றியிருந்தனர்.

கைதான நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல போலி உறுதி முடிப்புக்கள், காணி மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களுடன் அவர் தொடர்பு பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நபர் தனித்து குறித்த மோசடிகளில் ஈடுபடவில்லை எனவும், இவருக்குப் பின்னால் சிலர் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபரின் வங்கி கணக்குகள் மற்றும் சொத்துக்களை ஆராய்ந்து, அவர் யார் யாருடன் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பணப் பரிமாற்றங்களில் ஈடுபட்டார் என்பது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்து, தொடர்புடைய நபர்களை விசாரணை வளையத்திற்குள் கொண்டுவந்து விசாரணை செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபரை யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை, மன்று அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (04)

## கிளிநொச்சி பளைப் பொதுச்சந்தையில் பனை ஓலைப் பைகள் வழங்கி வைப்பு



உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் ஆண்டும் ஜூன் மாதம் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைகளைக் குறைத்து "ஆரோக்கியமான சூழல்" ஒன்றை உருவாக்கும் பொருட்டு விழிப்புணர்வு நிகழ்வு நேற்று பளை பொதுச் சந்தையில் நடைபெற்றது.

இதன்போது பொலித்தீனுக்கு மாற்றாக கடதாசிப் பைகள், துணிப்பைகள், பனையோலைப்பைகள் என்பன பயன்படுத்துவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வூட்டப்பட்டது.

மேலும், பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பைகளைப் பாவிப்பதற்குப் பதிலாக பனை ஓலையால் செய்யப்பட்ட பைகளைப் பாவிப்பதற்கு அவை இலவசமாக பொது மக்களுக்கு வழங்கியும் வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர், பனை அபிவிருத்திச் சபை போதனாசிரியர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (02)

## மிதி வெடி

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

**இந்த வருசத்தின்ர மிகச் சிறந்த "கொமடி" இதுவாத் தான் இருக்கும் பாருங்கோ...**

**நாட்டில இருக்கிற 17 பல்கலைக்கழகங்களில போராட்டம் நடக்குது எண்ட அடிப்படை கூடத் தெரியாமல் யாழ்ப்பாண "எம். பி" கதைக்கிறதால யாழ்ப்பாணத்தில மட்டும் தான் போராட்டம் எண்டு யோசிச்சிருப்பாரோ...? சரி, அப்பிடித்தான் எண்டாலும் துணைவேந்தர் வெளிநாடு போகேக்க பதிலுக்கு ஆள் போடாமல் போனவரே...? ஏதோ போன துணைவேந்தர் திறைசேரித் திறப்பையும் கொண்டு போயிட்டார், வந்தால் தான் சம்பளம் தரலாம் எண்ட கணக்காயெல்லோ கிடக்குது உவற்றை கதை...**

**உங்களுக்கு நல்லாத் தெரியும் தானே? நாட்டை இப்ப ஆளுறவர் நரியார் எண்டு... என்னதான் நியாயமான போராட்டமா இருந்தாலும் அதை நாலு துண்டா உடைச்சு, எதுவுமே செய்யேலாத மாதிரி நசுக்கிப் போடுறது அவருக்குப் புதுசில்லைத் தானே?**

**ஆனானப்பட்ட அமைச்சர் மாரெல்லாம் அதைத் தெரிஞ்சு கொண்டு அடக்கி வாசிக்கினம். விசியத்தை ஆறப்போட்டு "அட்ரஸ்" இல்லாமல் பண்ணுற வேலை ஆரம்பிக்கப்பட்டுட்டு... ஆளாளுக்குத் தேவையானதைக் குடுத்து அடுத்த முறை கூட்டுச் சேராத மாதிரி செய்யுற அதே நேரம், சம்பளம் குடுக்காமல் காய விட்டால் உள்ளுக்குள்ளயே அடி பிடிப்பட்டு வேலைக்குப் போனால் தான் சீவியம் எண்ட நிலைமைக்கு வரட்டும் எண்டு தான் இவ்வளவு இழுத்தடிப்பும் செய்யிறாராம் அவர்...**

**நரியார் நாடி பிடிச்சுப் பார்த்து, கூட்டுக்குள்ள புகுந்து நாலாக்கிற வேலை தொடங்கீற்றார் எண்டு தான் பொறுப்புச் சொல்ல வேண்டிய அமைச்சரே "பொத்திக் கொண்டு" இருக்கிறார்.**

**இதுக்குள்ள நேற்று முழுக்க எங்கட "நானும் அமைச்சர் தான்" ஐயா மணிக்கணக்கா பேசி மண்டையக் கழுவுறன் பேர்வழி எண்டு வாக்குறுதிகள அள்ளி வீசியிருக்கிறார்... ஆனது ஒண்டுமில்லயாம் பாருங்கோ...**

**"வாக்குக் குடுத்தது போல நீரே வாங்கிக் கட்டும்!" எண்டு விசியத்துக்குப் பொறுப்பான அமைச்சர் கைய விரிச்சிட்டாராம்...**

**இப்ப கடைசியா நரியார் மனம் வைச்சால் தான் நகரும் எண்ட நிலைமையில தமிழ் "எம். பி" ஒருத்தர் தான் தூது போகப் போறாராம்.**

**"உங்களுக்குத் தீர்வு குடுங்கோ எண்டு நான் கேக்க மாட்டன்... ஆனா உங்களோட கதைக்க நேரம் தாங்கோ எண்டு கேட்டு அவரச் சந்திக்க வைக்கிறது என்ர பொறுப்பு" எண்டு சொல்லியிருக்கிறாராம் அந்த "எம். பி".**

**பொது வேட்பாளர் வேணுமெண்டு கூட்டமாக் கோசம் போட்டாலும், தனிப்பட நான் அப்பிடிச் சொல்ல மாட்டன் எண்டு நாட்டுத் தலைவருக்கு வாக்குக் குடுத்திருக்கிற அந்த "எம். பி" கேட்டதால எதுவும் நடக்கலாம்... இப்ப பிடிச்ச இந்த முயல் கொம்பைக் கொஞ்ச நாள் முந்திப் பிடிச்சிருந்தால் இவ்வளவு இழுப்படிருக்காதெல்லோ...?**

**எங்கட ஆக்களுக்கும் எந்தெந்த நேரத்தில ஆர் ஆரைப் பிடிக்க வேணும் எண்டு பிந்தித் தான் விளங்குது போல...!**

**-நரமுனி**






# கலாசாலையில் கண்காட்சி





உலக சுற்றாடல் தினத்தை அடையாளப்படுத்தும் முகமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கணித விஞ்ஞான மன்றம் ஏற்பாடு செய்த விஞ்ஞான கணித உபகரண கண்காட்சி மற்றும் மரம் நாட்டல் நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் தேசியக் கொடி, கலாசாலைக்கொடி, சுற்றாடல் கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன. தேசிய கீதம், சுற்றாடல் கீதம் என்பனவும் இசைக்கப்பட்டன .

தொடர்ந்து ஆசிரிய மாணவர்களும் விரிவுரையாளர்களும் கலாசாலை சுற்றாடலை தூய்மையாக பேணுவோம் என உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை முழுநிலை விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜாவும் சிறப்பு விருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் க. சுபோகரனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர்ச் செல்வன் நெறிப்படுத்தினார்.

சுற்றாடல் பாதுகாப்புப் பற்றிய ஆசிரிய மாணவர் உரையினை கணித நெறி ஆசிரிய மாணவன் ச.சந்திரகுமார் ஆற்றினார்.

வரவேற்புரையினை ஆசிரிய மாணவி த.கீற்றாவும் விருந்தினர்கள் தொடர்பான அறிமுகவுரையை கல்வி அபிவிருத்திக்கான பிரதி அதிபர் த. கோபாலக்கிருஷ்ணனும் ஆற்றினர்.

அதிதிகளின் உரையைத் தொடர்ந்து விஞ்ஞான கணித ஆசிரிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடிவினா போட்டிக்கான பரிசளிப்பு நடைபெற்றது.

தொடர்ந்து, சூழலை நேசிக்கும் உணர்வுடன் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன. இந்த மரங்களை பிரதம விருந்தினர் கலாநிதி த.பிரதீபராஜா, கலாசாலை அதிபர் ச.லலீசன், யாழ்ப்பாணம் தேசியக்கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களான த.அம்பிகைபாகன் மற்றும் இ.சயந்தன் ஆகியோர் நாட்டினர்.

நிகழ்வின் நிறைவாக கணித விஞ்ஞான உபகரணக் கண்காட்சி திறந்துவைக்கப்பட்டது. காட்சிக்கூடத்தை பிரதம விருந்தினர் திறந்து வைத்தார்

ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக்கல்வியில் உள்ள விஞ்ஞான கணித உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அருகிலுள்ள பாடசாலை மாணவர்களுடன் கலாசாலை மாணவர்களும் கலந்து இக்கண்காட்சியை பார்வையிட்டு பயன் பெற்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.06.2024 இல் வெளியிடப்பெற்றது.